
**ஜனவரி – 19**

# TNPSC துளிகள்

- ஹோபார்ட் நகரில் உள்ள பிளன்ட்ஸ்டோன் அரங்கில் நடந்த ஐந்தாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில், ஆஸ்திரேலிய அணி இங்கிலாந்து அணியினை வீழ்த்தியது.
  - இந்த வெற்றியின் மூலம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் போட்டியில் (4-0) ஆஸ்திரேலியா அணி இங்கிலாந்து அணியை வென்றது.
- இந்தியக் கடற்படை மற்றும் ரஷ்யக் கடற்படை ஆகியவை இணைந்து அரபிக்கடலில் உள்ள கொச்சி துறைமுகத்தில் PASSEX என்ற கடற்பயிற்சியை மேற்கொண்டன.
  - இந்தியக் கடற்படையின் சார்பாக நமது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட ஒரு வழிகாட்டுதல் ஏவுகணை அழிப்புக் கப்பலான ஐஎன்எஸ் கொச்சி என்ற கப்பல் இந்தப் பயிற்சியில் பங்கேற்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## பென்னிகுயிக் சிலை




- ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள கேம்பர்லி நகரில், கர்னல் பென்னிகுயிக் சிலையை தமிழக அரசு நிறுவ உள்ளது.
- இது பிரிட்டிஷ் ராணுவப் பொறியாளர் பென்னிகுயிக் பிறந்த இடமாகும்.
- கேரளாவில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு நீர்த் தேக்கத்தைக் கட்டுவதில் இவர் முக்கிய பங்காற்றியவர் ஆவார்.
- இவர் 1895 ஆம் ஆண்டில் அந்த அணையைக் கட்டினார்.
- மறைந்த முதல்வர் மு. கருணாநிதி அவர்கள் கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதியன்று மதுரையின் தல்லாகுளத்தில் உள்ள பொதுப் பணித்துறை வளாகத்தில் கர்னல் பென்னிகுயிக்கின் உருவச் சிலையைத் திறந்து வைத்தார்.
- அதைத் தொடர்ந்து, தேனி மாவட்டத்தில் உள்ள கூடலூரில், லோயர் கேம்ப் என்னும் இடத்தில் தமிழக அரசு அவருக்கு ஒரு நினைவிடம் (மணிமண்டபம்) கட்டியதுடன், பென்னிகுயிக்கின் முழு உருவச் சிலையையும் அங்கு நிறுவியது.
- தேனியில் புதிதாக கட்டப்பட்ட ஒரு பேருந்து நிலையத்திற்கும் பென்னிகுயிக் பெயர்

சூட்டப் பட்டது.


# தேசியச் செய்திகள்

## 16வது இந்திய மின்னிலக்க முறை உச்சி மாநாடு 2022

- இது இந்திய இணையம் மற்றும் கைபேசிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த உச்சி மாநாட்டின் கருத்துருவானது, “Superchargeing Startups” என்பதாகும்.
- இந்திய மின்னிலக்க முறை உச்சி மாநாடு என்பது இந்தியாவின் மின்னிலக்கத் துறையின் மிகப் பழமையான நிகழ்வாகும்.
- இந்த நிகழ்வின் போது, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல், நமது நாட்டின் புத்தாக்க நிறுவனங்களின் சூழல் அமைப்பை மேலும் வலுப் படுத்துவதற்கான முன்னோக்கிய நடவடிக்கையாக 'LEAP' என்பதை வெளியிட்டார்.
- LEAP என்பதன் விரிவாக்கம் "Leverage, Encourage, Access & Promote" என்பதாகும்.




## கோவிட்-19 தடுப்பூசி நினைவு அஞ்சல் தலை வெளியீடு





- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கோவிட்-19 தொற்றுநோய் தடுப்பூசியின் நினைவாக உருவாக்கப்பட்ட ஒரு அஞ்சல் தலையை வெளியிட்டார்.
- இந்தியாவின் தேசிய அளவிலான கோவிட் தொற்று தடுப்பூசி வழங்கீட்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இது வெளியிடப்பட்டது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழு மற்றும் பாரத் பயோடெக் நிறுவனம் ஆகியவை இணைந்து உள்நாட்டிலேயே உருவாக்கிய கோவாக்சின் தடுப்பூசி நினைவாக இது

வெளியிடப் பட்டுள்ளது

- 2021 ஆம் ஆண்டு ஜூன் 21 முதல், 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி இலவசம் என அறிவிக்கப்பட்டது.

## நிலக்கரியை மெத்தனாலாக மாற்றும் முதல் ஆலை - இந்தியா

- மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் மகேந்திர நாத் பாண்டே, ஹைதராபாத்தில் BHEL எனும் நிறுவனத்தினால் கட்டப்பட்ட 'நிலக்கரியை மெத்தனாலாக மாற்றும் முதல் ஆலையை' திறந்து வைத்தார்.
- இது தற்போது, அதிக சாம்பல் மூலக்கூறு கலந்த இந்திய ரக நிலக்கரியில் இருந்து 99 சதவீதத்திற்கும் அதிகமான தூய்மைத் திறனுடன் மெத்தனாலை உற்பத்தி செய்து வருகிறது.
- உயர் சாம்பல் மூலக்கூறு கொண்ட இந்திய ரக நிலக்கரியை வாயுவாக்கலின் மூலம் மெத்தனாலாக மாற்றும் தொழில்நுட்பமானது, இந்தியாவிலேயே முதல் முறையாக கையாளப் படுகிறது.




## தபால் மூலம் வாக்களிப்பு

- இந்திய தேர்தல் ஆணையமானது, பத்திரிகையாளர்கள் தபால் மூலம் வாக்களிக்கச் செய்வதற்கு அனுமதி அளித்துள்ளது.
- தபால் வாக்களிப்பு வசதியைத் தேர்ந்தெடுக்கும் எந்தவொரு வாக்காளரும் வாக்குச் சாவடியில் வாக்களிக்க முடியாது.
- இது 1951 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் ஒழுங்கமைக்கப் படுகிறது.
- தற்போது, பின்வரும் வாக்காளர்களும் தபால் வாக்கு மூலம் வாக்களிக்க அனுமதிக்கப் படுகிறார்கள்.
    - சேவைப் பணியில் உள்ள வாக்காளர்கள் (ஆயுதப் படைகள், மாநிலத்தின் ஆயுதம் ஏந்திய காவல் படை மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் அரசு ஊழியர்கள்),

- தேர்தல் பணியில் உள்ள வாக்காளர்கள்,
- 80 வயதுக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் அல்லது மாற்றுத் திறனாளிகள்,
- தடுப்புக் காவலில் உள்ள வாக்காளர்கள்.

### டெல்லிப் போக்குவரத்துக் கழகத்தின் முதல் மின்சாரப் பேருந்து

- டெல்லிப் போக்குவரத்து கழகத்தின் முதல் மின்சாரப் பேருந்தினை டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- இந்த மின்சாரப் பேருந்துகள் தாழ்வான தள அமைப்புடைய, குளிர்சாதன வசதியினை கொண்ட பேருந்துகள் ஆகும்.
- இந்தப் பேருந்துகள் FAME - II எனப்படும் இந்தியாவில் கலப்பின மற்றும் மின்சார வாகனங்களை விரைவாக ஏற்றுக் கொள்தல் மற்றும் உற்பத்தி செய்தல் என்ற ஒரு திட்டத்தின் கீழ் வாங்கப் பட்டன.



## சர்வதேசச் செய்திகள்

### 'டாவோஸ் செயல்பாட்டு நிரல் 2022'




- உலகப் பொருளாதார மன்றத்தின் டாவோஸ் செயல்பாட்டு நிரல் காணொலி நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் உரையாற்றினார்.
- 2022 ஆம் ஆண்டிற்கான தங்களது புதிய கருத்துகளை உலகின் முக்கியத் தலைவர்கள்

பகிர்ந்து கொள்வதற்கான முதல் உலகளாவிய தளமாக இது இருக்கும்.

- 'உலகின் நிலை' (The State of the World) என்ற ஒரு கருத்துருவுடன் இந்த நிகழ்வு நடத்தப் படுகிறது.
- சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் அமைந்த உலகப் பொருளாதார மன்றம், பொது - தனியார் ஒத்துழைப்புக்கான ஒரு சர்வதேச அமைப்பாக தன்னை விவரிக்கிறது.
- கிளாஸ் ஸ்வாப், உலகப் பொருளாதார மன்றத்தின் நிறுவனர் மற்றும் நிர்வாகத் தலைவர் ஆவார்.

## காமன்வெல்த் போர்க் கல்லறை ஆணையம்


- ஐக்கிய இராஜ்ஜியத்தில் அமைந்துள்ள காமன்வெல்த் போர்க் கல்லறை ஆணையம் ஆனது அசாதாரண அம்சங்களுடன் கூடிய ஐந்து தளங்களைப் பட்டியலிட்டுள்ளது.
- இந்தத் தளங்கள் முதல் உலகப் போர் மற்றும் இரண்டாம் உலகப் போருடன் தொடர்பு கொண்டு உள்ளவை ஆகும்.
- அவற்றில் நாகாலாந்தின் கோஹிமா போர் மயானமும் (கல்லறை) ஒன்றாகும்.
- கோஹிமா போர்க் கல்லறை என்பது இரண்டாம் உலகப் போரின் போது 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கொஹிமாவில் உயிரிழந்த நேச நாட்டுப் படைகளின் 2வது பிரிட்டிஷ் படைப் பிரிவின் வீரர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நினைவு இடமாகும்.
- காமன்வெல்த் போர்க் கல்லறை ஆணையம் போர்களில் உயிரிழந்த ஆண்களும் பெண்களும் ஒருபோதும் மறக்க முடியாதவர்கள் என்பதைப் பறை சாற்றும் ஆறு உறுப்பு நாடுகளின் அரசுகளுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.
- இந்த ஆணையத்தில் ஆஸ்திரேலியா, கனடா, இந்தியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

## சீனாவில் குறைவான பிறப்பு விகிதம் பதிவு

- 2021 ஆம் ஆண்டில் சீனாவில் 1,000 பேருக்கு 7.52 குழந்தைகள் என்ற அளவில் பிறப்பு விகிதம் குறைந்துள்ளது.
- 1949 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் (பொதுவுடைமை) சீன நாடு நிறுவப்பட்டதிலிருந்து பதிவாகிய மிகக் குறைந்த தரவு இதுவே ஆகும்.
- வேகமாக அதிகரித்து வரும் வயது முதிர்ந்த தொழிலாளர் வளம், பல தசாப்தங்களாக நீடித்து வரும் பலவீனமான மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் மந்த நிலையிலான பொருளாதாரம் ஆகியவற்றுடன் சேர்த்து, அச்சுறுத்தும் நிலையிலான மக்கள்தொகை


நெருக்கடியுடன் சீனா போராடி வருகிறது.

- 2016 ஆம் ஆண்டில், சீனா அதன் நாட்டில் அறிவிக்கப்பட்ட "ஒரு குழந்தைக் கொள்கை" என்பதையும் தளர்த்தியது.
- தம்பதிகள் மூன்று குழந்தைகளைப் பெற அனுமதிக்கும் ஒரு கொள்கையை 2021 ஆம் ஆண்டில் சீனா நீட்டித்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சீனாவின் செயற்கை நிலவு





- சீனா தனது முதல் செயற்கை நிலவை உலகிற்கு அறிமுகப் படுத்தத் தயாராக உள்ளது.
- சீனாவின் செயற்கை சூரியன் ஆனது சூரியனை விட ஐந்து மடங்கு அதிக வெப்பத்தை அடைந்தது என்ற வெற்றிச் சோதனையைத் தொடர்ந்து இந்த சோதனை நடைபெறத் தொடங்கியது.
- காந்தத் தன்மையைப் பயன்படுத்தி குறைந்தப் புவியீர்ப்புச் சூழல்களை உருவாக்கச் செய்வதற்கு இந்த வசதி அவர்களுக்கு உதவும்.
- நிலவின் மேற்பரப்புடன் ஒத்திருக்கும் வகையில் இந்த ஆராய்ச்சி வளாகம் ஆனது பாறைகள் மற்றும் தூசிகளால் நிரப்பப்படும்.

- இதுவே உலகிலேயே தன்னளவில் இது போன்ற முதல் வகையிலான ஒரு ஆராய்ச்சிக் கூடமாகும்.
- இது விஞ்ஞானிகள் விரும்பும் வரை குறைந்த ஈர்ப்பு நிலைகளை தக்க வைக்கும் திறன் கொண்டது.
- இது 60 சென்டிமீட்டர் விட்டம் கொண்ட வெற்றிட அறைக்குள் புவியீர்ப்பு விசையைக் கட்டுப்படுத்தும் திறனும் பூமியின் ஈர்ப்பு விசையை மறையச் செய்யும் திறனும் கொண்டதாகும்.

## பண்டிட் பிர்ஜு மகாராஜ்

- உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த பழம்பெரும் கதக் நடனக் கலைஞர், பண்டிட் பிர்ஜு மகாராஜ் தனது 83வது வயதில் காலமானார்.
- பிர்ஜு மகாராஜ் கதக் நடனக் கலைஞர்களின் மகராஜ் வம்சத்தின் ஒரு வழித் தோன்றல் ஆவார்.
- இவர் இந்தியாவில் கதக் நடனத்திற்கான லக்னோ கல்கா-பிண்டடின் கரானாவின் ஒரு பிரதிநிதி (Lucknow Kalka-Bindadin gharana of Kathak dance) ஆவார்.
- இவர் இந்துஸ்தானி எனும் பாரம்பரிய இசையையும் பயிற்சி செய்தவர் என்பதோடு இவர் ஒரு பாடகரும் ஆவார்.
- இவர் தும்ரி, தாத்ரா, பஜன் மற்றும் கஜல் ஆகியவற்றில் சிறந்து விளங்கியவர் ஆவார்.




# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய ஓபன் 2022 - பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி

- புதுதில்லியில் உள்ள K D ஜாதவ் மைதானத்தில் நடைபெற்ற இந்திய ஓபன் 2022 - ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் லக்சயா சென், சிங்கப்பூரின் உலக சாம்பியனான லோ கீன் யூவை வீழ்த்தினார்.
- லோ கீன் யூ (Loh Kean Yew) தற்போதைய உலக சாம்பியன் ஆவார்.
- இந்திய ஓபன் 2022 மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில் தாய்லாந்தின் சுபனிடா

கேத்தோங்கை எதிர்த்து விளையாடிய இந்தியாவின் பிவி சிந்து தோல்வியுற்றார்.

- ஒற்றையர் பிரிவில் தாய்லாந்தின் புசானன் ஒங்பாம்ருங்ஃபான் (பெண்கள்), தாய்லாந்தின் சுபனிடா கதேதோங்கை வீழ்த்திப் பட்டத்தை வென்றார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★